14.10.2025



## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், துறையூர்.

## அசல் வழக்கு எண்.166/2010

## வா.சா. 1–மின்னல்கொடி, க/பெ. ராமர்

**சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது**

**4 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

இவ்வழக்கை நானும், என் தாயாரும் சேர்ந்து தான் தாக்கல் செய்தோம். வெங்கடாஜலபுரத்தில் தான் என் தாயார் 2 ம் வாதி வழக்கு தாக்கல் செய்யும் போது என்னுடன் தங்கியிருந்தார். வழக்கு தாக்கல் செய்யும் போது 2 ம் வாதி என்னுடைய தாயார் என்னுடன் தான் வெங்கடாஜலபுரத்தில் வசித்தார் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடைய தாயாரின் ஆதார் அட்டை, வாக்காளர் அடையாள அட்டை வெங்கடாஜலபுரத்தில் தான் வசித்தார் என்பதை காண்பிக்க ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். எனக்கு அரசாங்கத்தால் குடும்ப அட்டை வழங்கப்பட்டுள்ளது. என்னுடைய குடும்ப அட்டையில் 2 ம் வாதி என் தாயார் பெயர் உள்ளதா என்றால் இல்லை. அரசாங்கத்தால் வழங்கப்படும் ரூ.1000/– ஓய்வூதியம் பெற அவ்வாறு குடும்ப அட்டையில் சேர்க்கவில்லை.

14.10.2025



என்னுடைய தாயார் 2 ம் வாதி அரசாங்கத்தால் வழங்கப்படும் வயதானவருக்கான ஓய்வூதியம் வெங்கடாஜலபுரத்தில் வசித்து பெற்று வருகிறார் என்பதை காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளோம். அரசாங்கத்தால் வழங்கப்படும் வயதானவருக்கான ஓய்வூதியம் பலனை பெறுவதற்கு என் தாயார் 2 ம் வாதி எந்த வங்கியில் கணக்கு வைத்திருந்தார் என்று எனக்கு தெரியாது. இவ்வழக்கு தாக்கல் செய்யும் போது 2 ம் வாதி செல்லம்மாள் வெங்கடாஜலபுரத்தில் என்னுடன் வசிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. என் தாயார் 2 ம் வாதி வழக்கு தாக்கல் செய்யும் போது என்னுடன் வெங்கடாஜலபுரத்தில் வசித்திருந்தால் அதற்கு அத்தாட்சியாக நான் குடும்ப அட்டை, ஆதார் அட்டை, வாக்காளர் அட்டை, வங்கி கணக்கு புத்தகம், அரசாங்கத்தால் வழங்கப்படும் வயதானவருக்கான ஓய்வூதியம் தாக்கல் செய்திருப்பேன், அதனால் என் தாயார் வெங்கடாஜலபுரத்தில் வசிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. என் பாட்டனார் பெயர் வையாபுரி. வையாரிக்கு பழனியாண்டி, முருகேசன், ராஜூ என்ற மூன்று மகன்கள் உள்ளார்கள். எனது பாட்டனார் வையாபுரி அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தை தன்னுடைய மூன்று மகன்களான பழனியாண்டி, முருகேசன், ராஜூ ஆகியோரை தவிர வேறு

14.10.2025



யாருக்கும் பாகம் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். வையாபுரி எவ்வாறு தனது சொத்தை பாகம் பிரித்து தன்னுடைய மகன்களுக்கு கொடுத்தாரோ அதே முறையில் தான் அனுபவம் செய்து வருகிறார் என்று சொன்னால் சரிதான். என் பாட்டனார் வையாபுரி இறந்ததற்கான இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வையாபுரி இறப்பதற்கு முன்பே பழனியாண்டி இறந்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல, அதற்கு பிறகு தான் இறந்தார். பழனியாண்டி இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வையாபுரி பழனியாண்டிக்கு பிரித்து கொடுத்த சொத்தை தான் 1992ம் ஆண்டு அவருடைய மகன்கள் பாகபிரிவினை பத்திரம் எழுதிக்கொண்டார்கள் என்று சொன்னால் சரிதான். 1992ம் ஆண்டு பாகப்பத்திரம் ஏற்படுத்தும் போது பழனியாண்டி உயிருடன் இல்லை என்றால் சரிதான். வையாபுரி பழனியாண்டிக்கு பிரித்து கொடுத்த சொத்தை தான் என்னுடைய பாட்டி பிச்சாயி அதே சொத்தை பழனியாண்டிக்கு கொடுத்தார் என்று சொன்னால் சரிதான். இவ்வழக்கின் பாகபிரிவினை செய்யும் போது எங்களுக்காகவும் சேர்த்து தான் பி அட்டவணை சொத்தாக செல்வராஜ்க்கு கொடுக்கப்பட்டது என்பது தான் இவ்வழக்கின் என்னுடைய கட்சி என்று சொன்னால் சரிதான்.

14.10.2025



பாகப்பத்திரத்தில் அவ்வாறு எங்களுக்காகவும் சேர்த்து செல்வராஜ்க்கு கொடுக்கப்பட்டது என குறிப்பு காட்டப்பட்டுள்ளதா என்றால் அந்த பாகப்பத்திரம் எழுதும் போது படிப்பறிவு இல்லாமல் அவ்வாறு எழுதிவிட்டார்கள். 1992 ம் ஆண்டு பாகப்பத்திரம் ஏற்பட்ட விவரம் எனக்கு தெரியாது. எதன் அடிப்படையில் 1992 ம் ஆண்டு ஏற்பட்ட பாகபிரிவின் போது எங்களுக்காக என் அண்ணன் மகன் செல்வராஜ்க்கு சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது என சொல்கிறீர்கள் என்றால் எனக்கு தெரிந்த அளவில் சாட்சியம் அளிக்கிறேன். எனக்கு படிக்க தெரியாது. வழக்கு போடும்போது 1992 ம் ஆண்டு ஏற்பட்ட பாகப்பத்திரத்தை எனக்கு படித்து காண்பித்தார்கள். அவ்வாறு படித்து காண்பிக்கும் போது செல்வராஜ்வின் வாரிசுகளுக்கு உரிய சொத்தையும் சேர்த்து தான் எங்களுக்காக ஒதுக்கப்பட்டது என படித்து காண்பித்தார்கள். நான் தவறாக சாட்சியம் அளிக்கின்றேன், வையாபுரி உயிருடன் இருக்கும் காலத்திலேயே தன்னுடைய சொத்துக்களை மூன்று மகன்களான முருகேசன், ராஜூ மற்றும் பேரன் செல்வராஜ் ஆகியோருக்கு பிரித்து கொடுத்துவிட்டார்கள் என்று சொன்னால் சரிதான், எழுதிக்கொடுத்தார். இவ்வாறு ஏற்பட்ட பாகபிரிவினை ஊர்ஜிதம் செய்வதற்காக தான் 1992 ம் ஆண்டு

14.10.2025



பாகப்பத்திரம் எழுதப்பட்டது என்று சொன்னால் சரிதான், சாட்சி மீண்டும் இல்லை என்கிறார். எனது தாயார் செல்லம்மாள் செல்வராஜ் பிறந்த பிறகு தனது கணவருடன் வாழாமல் கூடமலைக்கு வேறொருவருடன் வசிக்க சென்றுவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு கூடமலையில் வேறொருவருடன் என் தாயார் வசிக்கும் போது ஒரு குழந்தை பிறந்து 18 ஆண்டுகள் வசித்து இறந்துவிட்டது என்று சொன்னால் சரியல்ல, ஆனால் என் தாயார் என் அண்ணனுடன் தான் இருந்தார். பழனியாண்டி மனைவி அவருடன் வசிக்காத காரணத்தினால் தான் பழனியாண்டிக்கு உண்டான பாகத்தை செல்வராஜ்க்கு என் தகப்பனார் ஒதுக்கினார் என்று சொன்னால் சரியல்ல. எனக்கும் 1ம் வாதி முத்துலெட்சுமிக்கு பேச்சுவார்த்தை உண்டு. எனக்கும், 2, 3 பிரதிவாதிகளுக்கு இடையே எந்தவித விரோதமும் இல்லை. 1 முதல் 3 பிரதிவாதிகள் என்னுடைய நலன் மற்றும் அக்கரைக்கு விரோதமாக செயல்படக்கூடியவர் இல்லை என்று சொன்னால் சரிதான். இவ்வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் என் தாயாரிடமிருந்து நான் உயில் எழுதி வாங்கினேன். என் தாயார் வழக்கு முடிவதற்கு இறந்துவிட்டால் என்ன செய்வது என்று தான் உயில் பத்திரம் எழுதி வாங்கினேன் என்று சொன்னால் சரிதான்.

14.10.2025



வழக்கு தாக்கல் செய்த பிறகு ஒரு வருடம் நல்ல உடல்நிலையுடன் இருந்தார். ஒரு ஆண்டுக்கு பிறகு உடல்நலம் குன்றியதால் உயில் சாசனம் எழுதி வாங்கினேன் என்று சொன்னால் சரிதான். இவ்வழக்கு தாக்கல் செய்யும் போது உயில் ஆவணம் எழுதப்படவில்லை என்பதால் அதை பற்றி என் தாயார் வழக்குரையில் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். என் தாயார் எனக்கு உயில் எழுதிவைத்தது பொய் என்றாலும், வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல.

/உண்மை நகல்/
ஒம்/-திரு.தி. அன்பு,
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
துறையூர்.